Nama :_______________________________________ Tingkatan 3 :______________

**SEKOLAH MENENGAH KEBANGSAAN BENTA,**
**27300 KUALA LIPIS, PAHANG.**

**PEPERIKSAAN PERTENGAHAN TAHUN 2021**

**PT3**

**BAHASA TAMIL**
**2 JAM** **(33)**

---

**JANGAN BUKA KERTAS SOALAN SEHINGGA DIBERITAHU**

| **Untuk kegunaan Pemeriksa** | | |
|---|---|---|
| Nama Pemeriksa: | | |
| Bahagian<br>பிரிவு | Markah Penuh<br>முழுப்புள்ளி | Markah Diperoleh<br>பெற்ற புள்ளி |
| A | 20 | |
| B | 20 | |
| C | 15 | |
| D | 15 | |
| E | 30 | |
| மொத்தம் | 100 | |

Disediakan oleh, Disemak oleh, Disahkan oleh,

------------------------------ ------------------------ --------------------------------

(KAYAIL KANNI TATARAO) ( ) (PN ROSHANI BONTI TALIB)
GURU MP/ KPMP GK BAHASA GPK PENTADBIRAN

LIVEWORKSHEETS

**BAHAGIAN A**
(30 நிமிடம்)

**செய்யுளும் மொழியணியும்**
[20 புள்ளி]

வினாக்களுக்கு **A,B,C,D** எனும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தூண்டல் பகுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்து வினாக்களுக்கு **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

கேள்வி 1 முதல் 3 வரை **இரட்டைக்கிளவி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1 கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற **இரட்டைக்கிளவியைத்** தெரிவு செய்க.



மழைக்காகச் சாலையோரத்தில் இருந்த கடையில் ஒதுங்கிவிட்டு, மழை நின்றதும் சாலையில் நடக்கத் தொடங்கிபோது, வீசிய காற்று உடலைக் குளிரச் செய்தது.

A சிலுசிலு
B பரபர
C துருதுரு
D தளதள

2 கூட்டுப்பணியின் போது ____________ என அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த அவ்விளைஞன் திடீரென மயங்கி விழுந்தது எல்லாருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

A கடகட
B துருதுரு
C சிலுசிலு
D தளதள

3 கீழ்க்காணும் வாக்கியங்களில் இரட்டைக்கிளவியைச் **சரியாகப்** பயன்படுத்தியுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A இடைவிடாது பெய்த மழையால் **தளதள** எனச் செழிப்பாக வளர்ந்திருந்த தக்காளிச் செடிகள் வெள்ளத்தில் மூழ்கின.

B அருணன் தன் பள்ளிப் பாடங்களைச் **சிலுசிலு** என செய்து முடித்தான்.

C பலமாக வீசிய காற்றால் மரத்தின் கிளை ஒன்று **பரபர** என முறிந்து விழுந்தது.

D நள்ளிரவில் யாரோ வீட்டின் கதவை **துருதுரு** எனத் தட்டும் ஓசை கேட்டுத் அல்லி திடுக்கிட்டு எழுந்தாள்.

LIVEWORKSHEETS

கேள்வி 4 முதல் 6 வரை **இணைமொழி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

4 தாயின் அன்பிற்கு ________________ இவ்வுலகில் வேறு எதையும் ஒப்பிட்டுக் காட்ட முடியாது எனக் கூறித் தன் உரையை முடித்தார் தாயம்மா.

| | | | |
|---|---|---|---|
| A | அடக்க ஒடுக்கமாக | C | ஊண் உறக்கமாக |
| B | ஈடு இணையாக | D | சீரும் சிறப்புமாக |

5 இந்நாட்டில் வறுமையை ஒழித்து, பொருளாதாரத்தில் நலிவுற்றிருக்கும் மக்கள் நல்வாழ்வு பெற பாடுபடுவதே, தம் அரசாங்கதின் தலையாய நோக்கம் எனப் பிரதமர் சூளுரைத்தார்.

| | | | |
|---|---|---|---|
| A | ஈடு இணை | C | அடக்க ஒடுக்கம் |
| B | ஊண் உறக்கம் | D | ஏழை எளியவர் |

6 கீழ்க்காணும் வாக்கியங்களில் இணைமொழி **தவறாகப்** பயன்படுத்தப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A நம் ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்ற அளவிலான **ஊண் உறக்கம்** அவசியம்.

B தானப்பன் தம் குடும்ப பொருளாதார முன்னேற்றத்திற்காக **ஊண் உறக்கம்** இன்றி உழைக்கிறார்.

C தெய்வத்திற்கு ஈடான **ஊண் உறக்கம்** அற்ற பிள்ளைகள் தீய வழிகளில் செல்லாதிருக்க அவர்களிடம் பெற்றோர் அன்பு செலுத்த வேண்டும்.

D **ஊண் உறக்கம்** இன்றி உடலை வருத்தி வேலை செய்வது பல நோய்கள் வர காரணமாக இருக்கின்றது.

கேள்வி 7 முதல் 9 வரை **உவமைத்தொடர்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

7 கீழ்க்காணும் செய்திக்கு ஏற்ற **உவமைத்தொடரைத்** தெரிவு செய்க.

| |
|---|
| கோலாலம்பூர், மார்ச் 31:- நாட்டின் மிகப் பெரிய பணமோசடி கும்பலின் தலைவரான, டத்தோஸ்ரீ நிக்கி லியோ சீன் ஹீ, அவரது குழு உறுப்பினர்கள் ஆகியோரை வேட்டையாட அமைக்கப்பட்ட 'ஒப்ஸ் பெலிகன் 3.0'-இன் தகவல்களை அதிகாரிகளும் காவல் துறையினர் சிலரும் கசியவிட்டதாகக் காவல் துறைத் தலைவர் அப்துல் ஹாமிட் பாடோர் தெரிவித்தார். **-செல்லியல் மின்னிதழ்** |

| | | | |
|---|---|---|---|
| A | இலவு காத்த கிளி போல | C | ஊமை கண்ட கனாப் போல |
| B | வேலியே பயிரை மேய்ந்தாற்போல | D | மலரும் மணமும் போல |

LIVEWORKSHEETS

8 கீழ்க்காணும் உவமைத்தொடர் இணைகளில் **சரியான** பொருளைக் கொண்டுள்ள இணையைத் தெரிவு செய்க.

| | உவமைத்தொடர் | பொருள் |
|---|---|---|
| A | தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல | தன் செயலில் கவனமாக இருத்தல் |
| B | இலவு காத்த கிளி போல | காத்திருந்து வெற்றியடைதல் |
| C | ஊமை கண்ட கனாப் போல | தெளிவாகத் தெரியாமை |
| D | மலரும் மணமும் போல | மிகவும் வாசனையாக இருத்தல் |

9 RM500-ஐ குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் சேர்த்தால் RM50,000 வரை அரசாங்க உதவித் தொகை பெறலாம் என்ற புலனத் தகவலை நம்பி பணத்தைச் செலுத்தி ஏமாந்து போனதை யாருக்கும் சொல்ல முடியாமல் தவித்தாள் புகழ்மதி.

A மலரும் மணமும் போல
B ஊமை கண்ட கனாப் போல
C இலவு காத்த கிளி போல
D தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல

கேள்வி 10 முதல் 12 வரை **மரபுத்தொடர்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

10 கீழ்க்காணும் படத்திற்கு ஏற்ற **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.



A உடும்புப்பிடி
B தலை வணங்குதல்
C கானல் நீர்
D இடித்துரைத்தல்

LIVEWORKSHEETS

11 கீழ்க்காணும் உரையாடலுக்கு ஏற்ற **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.

| | |
|---|---|
| தாய் : | மகனே, உனக்கு ஏற்ற பெண்ணைப் பார்த்து வந்திருக்கிறேன்! திருமணம் செய்துகொள். |
| மகன் : | இல்லை அம்மா! நான் மணந்தால் மகாதேவியைத்தான் மணந்து கொள்வேன். |
| தாய் : | அப்படிப் பேசாதே, மகனே! உன் எண்ணத்தை மாற்று. சம்மதம் சொல். |
| மகன் : | முடியாது அம்மா. நான் மணந்தால் மகாதேவியைத்தான் மணப்பேன்; இல்லையென்றால் மரணதேவியைத் தழுவுவேன். என்னை வற்புறுத்தாதீர்கள்! |

A உடும்புப்பிடி
B கானல் நீர்
C ஈயாடவில்லை
D இடித்துரைத்தல்

12 தன்னைப் பெற்று, வளர்த்து, படிக்க வைத்து வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு உயர்த்திய தன் பெற்றோரின் தியாகத்தை மதித்துப் போற்றினான் பாரிவேந்தன்.

A ஈயாடவில்லை
B உடும்புப் பிடி
C கானல் நீர்
D தலை வணங்குதல்

கேள்வி 13 முதல் 15 வரை **பழமொழி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

13 அரை குறையாகத் தெரிந்ததைக்கொண்டு மின்சாரத்தில் ஏற்பட்ட பழுதைச் சரி செய்ய முயன்ற முத்தழகன் மின்சாரம் தாக்கி மூன்று மாதம் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுத் திரும்பினான்.

A அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
B எறும்பு ஊரக் கல்லும் தேயும்
C அற்ப அறிவு ஆபத்துக்கிடம்
D பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

14 எந்த விதமான காரியங்களைச் செய்தாலும் தன் நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும்.

A அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
B ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
C பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு
D அற்ப அறிவு ஆபத்துக்கிடம்

LIVEWORKSHEETS

15 | மாணவப் பருவத்தை நன்கு பயன்படுத்தி கல்விக் கற்று வாழ்வில் உயர வேண்டும். அதைவிடுத்து, இக்காலத்தை வீணே செலவு செய்துவிட்டுப் பிற்காலத்தில் வருந்தி ஆகப்போவது எதுவுமில்லை.

A எறும்பு ஊரக் கல்லும் தேயும்
B அற்ப அறிவு ஆபத்துக்கிடம்
C அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
D பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

கேள்வி 16 முதல் 18 வரை **திருக்குறள்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

16 கீழ்க்காணும் திருக்குறளில் கருமையாக்கப்பட்டுள்ள சொல்லின் பொருளைத் தெரிவு செய்க.

**இழுக்கல்** உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

A உடைமை
B நன்னடத்தை
C வழுக்குநிலம்
D அறிவுரை

17 கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற திருக்குறளைத் தெரிவு செய்க.

மாறன் நல்லமுறையில் கூறிய அரிய கருத்துகளைக் கேட்டு அதன்படி அவ்வூர் மக்கள் துலங்கினர்.

A இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

B விரைந்து தொழில்கேட்டும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

C இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

D ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

LIVEWORKSHEETS

18 கீழ்க்காணும் **திருக்குறளின்** விடுப்பட்ட அடியைத் தெரிவு செய்க.

| |
|---|
| சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்<br>____________________________________ |

A மிகைநாடி மிக்க கொளல்
B தன்னையே கொல்லும் சினம்
C சொல்லிய வண்ணம் செயல்
D இழுக்கா இயன்றது அறம்

கேள்வி 19 முதல் 20 வரை **செய்யுள்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

19 கீழ்க்காணும் செய்யுளின் முதல் இரு அடிகளைத் தெரிவு செய்க.

| |
|---|
| ____________________________________<br><br>____________________________________<br>உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்<br>உறவு கலவாமை வேண்டும்<br>பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை<br>பேசா திருக்க வேண்டும். |

A சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று எண்ண வேண்டும்

B உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடயமுன் நிற்க வேண்டும்.

C வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு வேண்டும்

D ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்

LIVEWORKSHEETS

20 கொடுக்கப்பட்டுள்ள செய்யுளடிகளுக்கு மிகப் பொருத்தமான **பொருளைத்** தெரிவு செய்க.

> உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
> உறவு கலவாமை வேண்டும்.

A மனதில் ஒன்றும் வெளியில் ஒன்றுமாகப் பேசுவோரின் தொடர்பு எனக்குக் கிடைக்காதவாறு அருள் புரிய வேண்டும்.

B உன் பெருமை மிக்க புகழையே என்றும் நான் பேசுபவனாக இருக்க வேண்டும்.

C ஒரே மனநிலையுடன் உனது திருவடிகளை என்றும் நினைக்கின்ற நல்லவர்களின் நட்பு எனக்குக் கிடைக்க அருள் புரிய வேண்டும்.

D நான் என்றும் பொய் பேசாதவனாக இருக்க வேண்டும்.

**கேள்விகள் 1 முதல் 20 வரை : சரியான விடையைக் கருமையாக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | A | B | C | D |
| 2 | A | B | C | D |
| 3 | A | B | C | D |
| 4 | A | B | C | D |
| 5 | A | B | C | D |
| 6 | A | B | C | D |
| 7 | A | B | C | D |
| 8 | A | B | C | D |
| 9 | A | B | C | D |
| 10 | A | B | C | D |
| 11 | A | B | C | D |
| 12 | A | B | C | D |
| 13 | A | B | C | D |
| 14 | A | B | C | D |
| 15 | A | B | C | D |
| 16 | A | B | C | D |
| 17 | A | B | C | D |
| 18 | A | B | C | D |
| 19 | A | B | C | D |
| 20 | A | B | C | D |

LIVEWORKSHEETS

**Bahagian B** (20 நிமிடம்)

**இலக்கணம்** [20 புள்ளி]

1 அ) போலி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

______________________________________________

[4 புள்ளி]

ஆ) கீழ்க்காணும் இணைகளின் **போலி வகைகளை** எழுதுக.

i) அறம் - அறன் - ____________________

ii) ஞாயிறு - நாயிறு - ____________________

iii) அமச்சு – அமைச்சு - ____________________

[3 புள்ளி]

2 அ) **உடன்பாட்டுவினை** வாக்கியத்திற்கு (✓) என அடையாளமிடுக.

| | |
|---|---|
| திருமதி வெண்ணிலா செய்தியைத் திறம்பட வாசித்தார். | |
| சந்திரன் அழகான ஓவியம் வரைந்திலன். | |
| புகழ்மதி பள்ளிச் சுற்றுலாவுக்கு வருவாள். | |

[2 புள்ளி]

ஆ) **எதிர்மறைவினை** வாக்கியம் ஒன்றனை எழுதுக.

______________________________________________

[2புள்ளி]

3 கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள **பிழைகளை** அடையாளங்கண்டு வட்டமிடுக.

அ) ஆசிரியர் கூறிய ஓர் கதையைக் கேட்டு மாணவர்கள் மகிழ்ந்தனர்.

ஆ) அரசர் தான் நாளை நகர்வலம் வர இருப்பதாகக் கூறினார்.

இ) எத்துணை பெரிய உதவியைச் செய்த அவரை மறக்கலாகுமா?

[3 புள்ளி]

LIVEWORKSHEETS